


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 44 ○ 22.09.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ✉ ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


# எமது உறவுகளின் விலை ஆறாயிரம் ரூபாவா?

வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொந்தளிப்பு




## தமிழர் போராட்டத்தில் எழுக தமிழின் தடம்

விவேகன்

## திலீபனின் சுதந்திரப் புரட்சியும்,எழுக தமிழும்

தீபச்செல்வன்

## எழுக தமிழ் 2019 யாருக்கு வெற்றி? யாருக்குத் தோல்வி?

நிலாந்தன்

## BREXIT : பாராளுமன்றத் தாய்க்கொரு பழியென்றால்!



வேல்தர்மா

# எமது உறவுகளின் விலை ஆறாயிரம் ரூபாவா?

## அரசாங்கத்தின் நிவாரணத்தை நிராகரிக்கின்றோம்

### வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொந்தளிப்பு

காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு 6000 ரூபா கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக நிதி அமைச்சு



தெரிவித்துள்ளது. காணாமல் போனமைக்கான சான்றிதழை கொண்டு வரும் குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த தொகை வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் கார்த்திகை மாதம் முதல் இந்த கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் காணாமல்போன 656 குடும்பங்களுக்கு காணாமல் போனோருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள ஆறாயிரம் ரூபா நிவாரண தொகையை தாம் முழுமையாக நிராகரிப்பதாக காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளை இழந்துவாடும் அனைத்து குடும்ப உறவினர்களும் வேதனையுடன் கூட்டாக கருத்துத் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் குறித்து அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாம் ஆடு, மாடுகளை தொலைக்கவில்லை. எமது சொந்தங்களையே பறிகொடுத்துவிட்டு வீதிகளில் நிற்கின்றோம். இந்த அரசை நம்பி கையிலே ஒப்படைத்த எமது உறவுகள் எங்கே என்பதற்கு இலங்கை அரசு பதில் கூறாமல் வெறும் ஆயிரம் ரூபாவை வழங்கி எம்மை ஏமாற்றப் பார்ப்பதோடு எமது நீதிக்கான போராட்டத்தையும் கொச்சைப்படுத்தப் பார்க்கிறார்கள் என்று பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 10ம் பக்கம்....

# நாளை வரை பிக்குவின் உடலை புதைக்கவோ, எரிக்கவோ நீதிமன்றம் தடை

## தடையையும் மீறி உடல் ஆலயம் அருகில் வைக்கப்பட்டுள்ளதால் பதற்றம்



முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து விகாரை அமைத்து தங்கியிருந்த கொலம்பே மேதாலங்கார தேரர் என்ற பிக்கு புற்று நோய் காரணமாக நேற்று மரணமடைந்துள்ளார். இந்த நிலையில் மரணமடைந்த பிக்குவின் சடலத்தை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்துக்கு கொண்டுவந்து இறுதி கிரியைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்து நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் நேற்றைய தினம் (21) இரவு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடை கோரி முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சுதர்சன் முன்னிலையில் இந்த விவகாரம் விசாரணைக்கு வந்தது. இதன்படி 23.09.2019 நாளை காலை 9 மணிக்கு விகாரை தரப்பினரையும், பிள்ளையார் ஆலய

தொடர்ச்சி 3ம் பக்கம்....

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான ஆறாயிரம் ரூபா விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் காப்பது ஏன்?

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

வலிந்து காணாமாலக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபாவை வழங்குதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து பல குரல்கள் எழுந்துள்ள நிலையில் அவர்களின் ஆணைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக இருந்து வருவதற்கு காரணம் என்ன என்று தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியுள்ளது.

வலிந்து காணாமாலக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் முழுவீச்சில் தமிழர்களின் தாயகத்தில் நடைபெற்று வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் இந்த அறிவிப்புக்கு கூட்டமைப்பு மௌனமாக இருக்கின்றமையானது இந்த இழப்பீட்டு தொகை அறிவிப்புக்கு பின்னால் கூட்டமைப்பு இருப்பதோடு நீதிக்கான போராட்டங்களை பலவீனப்படுத்துவதற்கான உத்தியாக உள்ளதா என்றும் அவதானிப்பு மையம் கேள்வி தொடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவதானிப்பு மையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர்களின் தாயகத்தில் உரிமைப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் முள்ளிவாய்க்கால் அவலம் அரங்கேறிய நாள் வரையிலும் அதற்கு பின்னரான ராஜபக்சவின் இருண்ட யுகத்திலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும், சரணடைந்த பின்னரும் காணாலமாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்று கூறி தமிழர் தாயகமெங்கும் அவர்களின் அன்புக்குரியவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். தமது அன்புக்குரியவர்கள் வருவார்கள் என்ற ஏக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 40பேர் வரையிலானவர்கள் ஏமாற்றத்துடனேயே இவ்வுலகையே விட்டு பிரிந்து சென்றது வேதனைக்குரியது.

இன்னும் பல சொந்தங்கள் அன்றாட வாழ்க்கைக்கையையே வாழ முடியாது மிகுந்த நெருக்கடிளில் இருந்துகொண்டு போராட்டங்களில் பங்கேற்றும், தமது சொந்தங்களை தேடியும் அலைந்துகொண்டு வீதிகளில் காலத்தினைக் கழித்து வருகின்றார்கள்.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இரண்டு ஆணைக்குழுக்களை நியமித்து அவற்றின் அறிக்கைகளை பெற்றபின்னர் எதனையுமே செய்யாது சர்வதேசத்திற்கு கண்ணாம்பூச்சி காட்டிவிட்டது. பின்னர் ஐ.நா மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 30.1, 34.1, 40.1 தீர்மானங்களின் பிரகாரம் அரசாங்கம் பொறுப்புக்கூறலை ஏற்றுக்கொண்டது.

எனினும், ஐ.நாவினையும், சர்வதேச நாடுகளையும் ஏமாற்றி நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே அரசாங்கம் அவ்வாறான சூட்சும நாடகத்தினை மேற்கொண்டிருகின்றது. இதற்கு தமிழ் மக்களின் ஆணைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோயுள்ளது.

குறிப்பாக சர்வதேச நெருக்கடிகள் ஏற்படுகின்ற பொது பொறுப்புக்கூறலின் ஒரு அங்கமாக காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்திற்கான சட்டமூலத்தினை நிறைவேற்றுவது, பின்னர் கால இடைவெளியில் அலுவலகத்தினை திறப்பது, சற்றுக்காலம் தாழ்த்தி கிளை அலுவலகங்களை வடக்கில் திறப்பது என்று நகர்ந்து சென்றது இலங்கை அரசு.

தற்போது 42ஆவது ஐ.நா மனித உரிமைப்பேரவைக் கூட்டத்தொடர் நடைபெற்று வரும் ஏக காலத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மாதந்தம் ஆறாயிரம் ரூபாவை வழங்குவதாக அறிவித்துள்ளது. தமது சொந்தங்களை மட்டுமே தேடிக்கொண்டிருக்கும் அனைத்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் இந்த அறிவிப்பினை நிராகரித்துள்ளனர். ஆனால் உறவுகளின் எதிர்ப்பினை மீறி அவர்களின் ஆணைபெற்ற கூட்டமைப்பு காணாமலாக்கப்பட்ட அலுவலகத்திற்கான

தொடர்ச்சி 11ம் பக்கம்....

# இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்வதுதான் ஒரேயொரு வழி!

## ஐ.நாவில் கஜேந்திரகுமார் உரை

இலங்கையில் குற்றவியல் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி, இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்வதே யாகும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் சபையின் 42ஆவது கூட்டத் தொடரின் பொது விவாதத்தில் விடயம் 5 இன் கீழ் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இதுவரை காலமும் வெளிவந்த அறிக்கைகளுள் இலங்கை மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வெளிவந்த ஓர் அறிக்கை, ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளரின் இலங்கை மீதான அலுவலக விசாரணை அறிக்கையாகும். இலங்கையில் இழைக்கப்பட்ட மிகப் பாரதூராமான குற்றங்கள் மற்றும் இவை தொடர்பில் நீதி வழங்குதலில் இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையின் செயல்பட முடியாத தன்மை போன்றவற்றினால், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமானது இலங்கையில் ஒரு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையொன்றைப் பிரேரித்திருந்தது.

ஆனால், இலங்கை மீதான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையை தொடர்ந்து நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள்சபைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்கத் தீர்மானத்தில், வேண்டுமென்றே

தொடர்ச்சி 11ம் பக்கம்....

# சுமந்திரன் பதவி விலக இதுவே சரியான நேரம்

**சுரேஷ் பிறேமச்சந்திரன் கருத்து**

புதிய அரசியலமைப்பு நிறைவேறாது போனால் முழுப் பொறுப்பையும் தாமே ஏற்றுப் பதவி விலகுவேன் எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறியிருந்தார். அவ்வாறு இல்லாது அரசியலமைப்பு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தாலும் கூட தனது கடமை முடிந்துவிட்டது எனத் தாம் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவார் எனவும் தாமாகவே அவர் கூறியிருந்தார். அதுமட்டுமல்லாது தனது இராஜினாமா கடிதத்தில் அரைவாசி எழுதிவிட்டார் எனவும் மிகுதியையே எழுத வேண்டியிருக்கிறது எனவும் பலசந்தர்ப்பங்களில் கூறியிருந்தார்.

இப்போது அவரது தனது இராஜினாமா கடிதத்தின் மிகுதியையும் எழுதி முடிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன். கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் தாம் இனப் பிரச்சினைக்கான தீர்வை எப்பாடுபட்டும் பெற்றுக் கொடுப்பார் எனக் கூறியவரால் தமிழ் மக்களுக்கு எதனையுமே பெற்றுக்கொடுக்க முடியவில்லை. மக்களுக்கு ஆக்கப்பூர்வமான விடயங்கள் எதனையும் செய்யவில்லை. தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கும் வேலையை மட்டுமே செய்து வருகின்றார். இதனை தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்துகொண்டு செய்யவேண்டிய தேவையில்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டே செய்யலாம். எனவே சுமந்திரன் கூறியது போல, தனது இராஜினாமா கடிதத்தை முழுமைப்படுத்தி உடனடியாகப் பதவி விலகவேண்டும். அவர் அரசியலில் இருந்து விலகினாலும் வெறுமனே தமிழ் மக்களின் அரசியலில் இருந்து மட்டுமே ஒதுங்குவார் என நினைக்கின்றேன். அவர் ரணிலைப் பாதுகாக்கும் பணியை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டு தொடரலாம். ரணிலைக் காப்பாற்றிக் கொண்டு அவருக்குச் சேவகம் செய்து வருவதால் இப்போது ஐக்கிய தேசியக் கடசிக்குள்ளும் அவருக்கு எதிர்ப்புக்கள் வந்துள்ளன.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்பட்ட சுமந்திரன் தற்போது சஜித் பிரேமதாஸவின் அணியின் கோபத்துக்கு ஆளாகியுள்ளார். நாட்டில் சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் சனாதிபதியின் நிறைவேற்று அதிகார ஒழிப்பு பற்றி விசேட அமைச்சரவை ஊடாகத் தீர்மானிக்கவேண்டிய அவசரம் என்ன?அந்த அதிகாரம் இல்லாது ஒழிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் இத்தனை காலமும் இருந்து விட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஏன் இவ்வாறான முயற்சியை எடுக்கவேண்டும். இதுகூடத் தனது எஜமான் ரணிலைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சியே. சனாதிபதிக்கான நிறைவேற்று அதிகார ஒழிப்பை அமைச்சரவைக்குக் கொண்டுவர முன்னின்று பணியாற்றியவர் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனே. சனாதிபதி, பிரதமர் என இருதரப்பையும் சந்தித்துப் பெரும் முயற்சியை எடுத்திருந்தார். இவ்வாறான அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த சுமந்திரன் அரசியலமைப்பை முழுமைப்படுத்த முயற்சி எடுத்திருக்கின்றாரா? அரசியல் கைதிகளை விடுவிக்கச் செய்திருக்கின்றாரா? சுமந்திரன் பதவி விலகுவதற்கான காலம் வந்துவிட்டது. எனவே அவர் கூறியதுபோல தாமாகவே இராஜினாமா செய்யவேண்டும் என்றார்.

2ம் பக்க தொடர்ச்சி.... நாளைவரை பிக்குவின்

தரப்பினரையும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும், நாளைய தினம் இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தால் கட்டளை ஒன்று ஆக்கும் வரை குறித்த பௌத்த பிக்குவின் உடலை பூமியில் புதைக்கவோ, எரிக்கவோ முடியாது எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த நிலையில் இறந்த பிக்குவின் உடல் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையில் வைக்கப்பட்டுள்ளது. உடலை ஆலய வளாகத்திற்குள்ளேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று ஏனைய பிக்குமாரும், அங்கு திரண்டிருக்கும் சிங்கள கடும் போக்காளர்களும் விடாப்பிடியாக நிற்பதோடு, உடலை அடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக காவல்துறை, இராணுவம் மற்றும் கடற்படையினர் என அனைத்து அதிகார வர்க்கமும் இருப்பதால் அந்தப் பகுதியே மிகவும் பதற்றத்துடன் காணப்படுகிறது.

எல்லைப்புற கிராமங்களில் உள்ள சிங்கள மாணவர்கள், பொது ஜன பெரமுன கட்சியினர் உள்ளிட்டவர்கள் பௌத்த பிக்குவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மேலும் நாளை அனுராத புரத்திலிருந்து பெரும் திரளான சிங்கள மக்களை அழைத்து வந்து உடலை அடக்கம் செய்யும் நிகழ்வை பெரிய அளவிலே நடாத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதோடு இதன் பின்னணியில் சிங்கள பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் களமிறங்கியுள்ளதாக அறியமுடிகிறது. இதனை உணர்ந்து தமது உரிமையை பாதுகாப்பதற்காகத் சனநாயக விழிமியங்களுக்கு உட்பட்டு தமிழ் மக்களும் பிள்ளையார் ஆலயத்தை சூழ திரண்டுள்ளனர். இதனால் அந்த பகுதி ஒவ்வொரு நிமிடமும் என்ன நடக்கும் என்ற கேள்விகளுடன் நகர்ந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் காவலன்!

"நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான நகர்வுக்கு நல்லாட்சி அரசைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமை பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றது. இது அவர்களது அதியுச்ச சுயநலத்தையும், சந்தர்ப்பவாதத் தன்மையையுமே வெளிப்படுத்துகின்றது."

அமைச்சரவையில் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான தீர்மானம் நிராகரிக்கப்பட்ட உடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சீற்றத்துடன் வெளியிட்ட 'டுவீட்டர்' பதிவுதான் இது. அவரது ஏமாற்றத்தையும், அதிப்தியையும் இது வெளிப்படுத்துகின்றது. வாக்களித்து எம்.பியாக்கிய தமிழர்களைவிட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதே அதிக விசுவாசம் கொண்டவர் சுமந்திரன் என்பதை இந்தப் பதிவின் மூலம் மீண்டும் ஒரு தடவை சுமந்திரன் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே தான் அரசியலுக்கு வந்ததாக அடிக்கடி சொல்லிக் கொள்ளும் சுமந்திரன், அவ்வாறு பெற்றுக்கொடுக்க தன்னால் முடியாவிட்டால் பதவியைத் துறக்கப்போவதாகவும் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். ஐ.தே.க மூலமாக ரணில் மட்டுமே தீர்வைத் தரக்கூடிய ஒருவர் என சுமந்திரன் சொல்கின்றார். ஆனால், அவ்வாறு வரப்போகும் தீர்வு ஏற்கனவே இருக்கும் 13 ஆவது திருத்தத்தைவிட அதிகமானதாக இருக்கப்போவதில்லை. கடந்த மூன்று வருடமாக நடைபெறும் அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளைப் பார்க்கும்போது அதுதான் தெரிகின்றது.

ஏதோ ஒன்றைத் தந்துவிட்டு இதுதான் தீர்வு என சொல்வதை தமிழர்கள் ஏற்க வேண்டும் என்பதுதான் சிங்களத் தலைமையின் மனோபாவம். அதற்கான கள நிலைமைகளை ஏற்படுத்தும் முயற்சிகளைத்தான் சுமந்திரன் மேற்கொண்டு வந்திருக்கின்றார். இப்போதும் வருகின்றார். புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போது, அதற்கு மூன்று நோக்கங்கள் அதன் முகவுரையிலேயே சொல்லப்பட்டிருந்தது. முதலாவது — நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை மாற்றுவது. இரண்டு — தேர்தல் முறை மாற்றம். மூன்று—அதிகாரப் பரவலாக்கல் மூலம் இன நெருக்கடிக்கான தீர்வு.

ஆரம்பத்திலேயே இனநெருக்கடிக்கான தீர்வு அதிலிருந்து நீக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரப் பதவியை முற்றாக நீக்காமல் சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. தேர்தல் முறை மாற்றம் இப்போதும் விவாதிக்கப்படுகின்றது. முகவுரையிலிருந்து இனநெருக்கடி என்ற அம்சம் நீக்கப்பட்டபோது மௌனமாக இருந்த சுமந்திரன், இப்போது ரணிலைப் பாதுகாக்க முடியாத நிலை வந்தபோதே சீற்றமடைகின்றார். ரணிலைப் பாதுகாப்பதற்காக "பின்கதவால்" இவ்வளவையும் செய்த சுமந்திரன், தமிழ் மக்களுடைய அடிப்படையான விடயங்களுக்காக தன்னுடைய 'சட்டத்தரணி' மூளையைப் பயன்படுத்த விரும்பாமலிருப்பது ஏன்?

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்த காலம் முதல் கடந்த ஐந்து வருட காலமாக, ரணிலின் காவலனாக மட்டுமே சுமந்திரன் செயற்பட்டு வந்திருக்கின்றார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொண்ட நேரங்களில் "பிணை" எடுத்தவர் சுமந்திரன்தான். அதனால், மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் வலுவற்றவையாகிவிட்ட ஒரு நிலைமையைக் காண்கின்றோம். ரணில் அரசாங்கத்தை மைத்திரி கலைத்த போது, ரணிலைப் பாதுகாக்க இரவு பகலாக உழைத்தவர் சுமந்திரன் என்பது அனைவருக்கும் தெரியும். வரவு செலவுத் திட்டங்களில் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதும் எந்த நிபந்தனைகளும் இல்லாமல் ரணிலைப் பாதுகாக்க முன்னிற்பவர் சுமந்திரன்தான். இப்போது சஜித்திடமிருந்து ரணிலைப் பாதுகாக்க முற்பட்டு மூக்கு உடைந்தவராக நிற்கின்றார்.

ரணிலைப் பாதுகாத்த இத்தனை முயற்சிகளையும் நிபந்தனைகளுடன் செய்திருந்தால் இனநெருக்கடிக்கு உருப்படியான ஒரு தீர்வைக் கண்டிருக்க முடியும். கைதிகளை விடுவித்திருக்க முடியும். காணிகளை மீட்டிருக்க முடியும். சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்திருக்க முடியும். இந்த நிலையில்தான் சுமந்திரன் கூட்டமைப்பு எம்.பியா? அல்லது ஐ.தே.க எம்.பியா? என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது. கூட்டமைப்பிலுள்ள மற்றைய எம்.பிக்களாவது இதற்கான பதிலைக் கூறாவிட்டாலும், தெரிந்திருந்தால் நல்லது. ஏனெனில் இதற்கான பழியை எதிர்காலத்தில் அவர்களும்தான் சுமக்க வேண்டும்!

# எம்மண்ணை நேசிக்காத எவரும் இம்மண்ணை ஆள அருகதையற்றவர்கள்

தியாக தீபம் திலீபன்



# தமிழர் போராட்டத்தில் எழுக தமிழின் தடம்

புதைக்கப்பட்ட தமிழர் உடல்களோடு உடலாக, அனைத்துலக மனித உரிமை கோட்பாடுகளையும், வரையறைகளையும், நியமங்களையும், நம்பிக்கையினையும் சேர்த்தே புதைக்கபட்டுவிட்டதை இன்றளவும் மெய்ப்பிப்பதாகவே தமிழினப் படுகொலைக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது என்ற கூற்றின் வழியே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கான நீதியானது அனைத்துலக நாடுகளின் அரசியல், பொருளாதார, இராஜதந்திர நலன்களை முன்னிறுத்தி தாமதிக்கப்பட்டு வருவதன் வெளிப்பாடேயாகும். தமிழர்கள் மீதான கட்டமைப்பு சார் இனவழிப்பை முழுவீச்சில் முன்னெடுத்து வரும் இலங்கை அரசிற்கு மேற்கூறப்பட்ட புறநிலையானது மென்மேலும் ஊக்கத்தையே கொடுத்து வருகின்றது.

இந்த நச்சு வட்டத்திலிருந்து எமக்கான நீதியை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தமிழர்களாகிய நாம் தேசமாக அணி திரண்டு ஒருமித்த குரலில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதனை நன் குணர்ந்தே தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ்—2019' எழுச்சிப் பேரணியை கடந்த 16ஆம் திகதி யாழில் ஏற்பாடு செய்திருந்தது. தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்திருந்த காலத்தைவிடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் தற்காலச்சூழலில் மிகப் பெரியதாகியுள்ளமையே எழுக தமிழுக்கான கதவினைத் திறந்துள்ளது.

தாயகத்தில் வெளிப்படும் எழுகையானது தமிழர் பெரும்பரப்பில் மேற்கொள்ளப்படும் நீதிக்கான முன்னெடுப்புகளுக்கு பலம் சேர்ப்பதாக அமையும் என்பதனை எழுக தமிழ் மீண்டும் எடுத்தியம்பியுள்ளது.

### எழுச்சியுடன் அணிதிரள்வு

வடக்கு கிழக்கு தழுவியதாக தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப்பட்டதோடு தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் முழுமையான ஆதரவுடன் தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் தமிழர்கள் அனைவரும் தேசமாக தமிழர்கள் எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணியில் அணி திரண்டிருந்தனர். பல்கலைக் கழக மாணவர் சமூகம் உட்பட சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தும் நாம் கட்சிகளின் பின்னால் இல்லை மக்களின் நீதிக்கான நியாயமான கோரிக்கைகளின் பக்கமே என்பதை வெளிப்படுத்தி எழுக தமழுக்கு தமது முழு ஆதரவையும் வழங்கினார்கள்.

எழுக தமிழை பேரெழுச்சியுடன் முன்னெடுக்க ஏதுவாக வடக்குக் கிழக்கு தழுவியதான பூரண கதவடைப்பிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கும் சகல தரப்பினரும் முழுமையான ஆதரவை வழங்கி வடக்குக் கிழக்கினை முடங்கச் செய்திருந்தமையும் தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு தடமாகும். ஆம், 16ஆம் திகதி காலை முதலே தமிழர் தாயகமெங்குமிருந்தும் பலதரப்பட்ட தரப்பினரும் நல்லூர் முன்றலிலும், யாழ். பல்கலைக்கழக மைதானத்திலும் ஒருங்கிணைய ஆரம்பித்தனர். பின்னர் 10.30 மணியளவில் இரண்டு பேரணிகளும் முற்றவெளி நோக்கி நகர ஆரம்பித்தது. அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்பினர், மதத்தலைவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், முன்னாள் போராளிகள், தொழிற்சங்கத்தரப்பினர்,

விவேகன்

பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் எழுச்சிப்பேரணி முற்றவெளி நோக்கி நகர ஆரம்பித்தது. கந்தர்மடம் சந்தியில் இரு பேரணிகளும் இணைந்து கொள்ளவும் சுமார் ஒருகிலோமீற்றருக்கும் அதிகமாக மக்கள் வெள்ளம் வீதியை நிறைத்தது. இப்பாரிய பேரணி பின்னர் கே.கே.எஸ். வீதிவழியாக யாழ்முற்றவெளியை வந்தடைந்ததையடுத்து பிரதான கூட்டம் நடைபெற்றிருந்தது.




### எழுக தமிழ் பிரகடனம்

அதனையடுத்து எழுக தமிழ் எழுச்சி ஒரு அங்கமான எழுக தமிழ் பிரகடனம் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் வைத்தியகலாநிதி பூ.லக்ஸ்மனால் வாசிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. குறித்த பிரகடனத்தில், எம்மக்கள் முன்னின்று நடாத்தும் பேராட்டங்களின் கோரிக்கைகளும், தமிழ் மக்களது அரசியற் தீர்வு தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையினது தீர்வுத் திட்ட யோசனைகளும் எழுக தமிழ் பேரெழுச்சியின் பிரகடனங்களாக நிமிர்ந்து நிற்கின்றன எனக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், இலங்கை அரசே!, சர்வதேசமே!, சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து..!, பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கு..!, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்...!, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியான தீர்ப்பை முன்வை...!, வடக்குக் கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து...!, இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து...!, சர்வதேசமே! இலங்கையில் தமிழர் மீதான இனவழிப்பு விசாரணையை நடத்து ஆகிய ஏழம்சக் கோரிக்கைகளும் பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டிருந்தன.

### நீதியரசரின் நீதிக்கோரிக்கை

தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வன், எமக்கெதிராகப் பயன்படுத்தி வருகின்ற இந்த அநியாயங்களையும், அடக்குமுறைகளையும் நாம் இனியும் அனுமதிக்க முடியாது. அவ்வாறான அரச நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்று கூறியே இன்றைய 'எழுக தமிழ்" நிகழ்வில் நாம் கிளர்ந்து நிற்கின்றோம். இந்தியா தீர்வு ஒன்றினை கொண்டுவரும் என்று எமது மக்கள் திடமாக நம்புகின்றார்கள். இலங்கை இன பிரச்சினை தொடர்பில் இந்தியா இதுவரை கடைப்பிடித்து வரும் மென்போக்குநிலையில் இருந்து விலகி தமிழ் மக்களின் இருப்பையும், அடையாளத்தையும் பாதுகாக்கும் வகையில் துணிச்சலான நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி எடுக்க வேண்டும். எம்மக்களை மத அடிப்படைவாதப் பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும் நபர்களுடன் முடிச்சுப் போடாதீர்கள். எமது இளைஞர்கள், யுவதிகள் மற்றோர் யாவரும் எமது விடுதலைக்காகப் போராடினார்கள். அரச பயங்கரவாதத்திற்கு ஈடுகொடுக்க ஆயுதம் ஏந்தியவர்களே எமது மக்கள்.

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை ஒரு விசேட பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தும் வகையிலும், கண்காணிக்கும் வகையிலும் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் வடக்குக் கிழக்கில் தனது அலுவலகங்களை திறக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி காத்திரமான உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

### தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் ஆதரவு அலை

எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உரிமைகளை மீட்போம், இன அழிப்புக்கு நீதி கேட்போம் எனும் தொனிப்பொருளில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்களான தனியரசு தமிமுன் அன்சாரி உட்பட உணர்வாளர்கள் பலர் எழுச்சியுடன் பங்கெடுத்திருந்தனர். இதனைவிடவும் அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும், கனடாவிலும், நியூசிலாந்திலும், ஐ.நா முன்றலிலும் ஒன்றுகூடிய புலம்பெயர் சொந்தங்கள் உணர்வெளிச்சியுடன் போராட்டப் பேரணியினை முன்னெடுத்திருந்தனர்.

### தற்போதைய யதார்த்தம்

எழுக தமிழ் எழுச்சிப்பேரணி தொடர்பில் வெவ்வேறு கோணங்களில் நின்று ஆயிரமாயிரம் விமர்சனங்களை முன்வைப்பவர்கள் தமது சுயலாபத்தின் பால் நின்று நோக்குபவர்களே. ஆனால் மக்கள் தமது அபிலாசைகளுக்காகவே அணிதிரண்டு உணர்வெளிச்சியுடன் பங்கு கொண்டிருந்தமையையும், அனைத்து தரப்பும் ஒத்துழைப்பு ஹர்த்தாவை கடைப்பிடித்தருந்தமையும் மறுதலிக்க முடியாத உண்மையாகின்றது. எழுக தமிழ் வெறுமனே போராட்டம் மட்டமல்ல. தாயகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ் மகனின் எதிர்கால வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதற்கான தடம் என்பதே நிதர்சனம். இந்த வீச்சின் பிரதிபலிப்பு எம்முரிமை மறுப்புக்கான இரும்புத்திரையை உடைத்தெறியும் என்பதும் கண்கூடு.

# திலீபனின் சுதந்திரப் புரட்சியும், எழுக தமிழும்

**தீபச்செல்வன்**

தமிழ் ஈழத்தில் தனிநாடு கோரிய ஆயுதப் போராட்டத்தின் வரலாறு முப்பது ஆண்டுகள். ஆனால் வரலாற்று ரீதியாக அறுபத்தைந்து ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் இழந்த தமது இறைமையை மீட்பதற்காக போராடி வருகின்றனர். ஆயுதப் போராட்ட காலத்தில்கூட சனநாயக ரீதியான அகிம்சை ரீதியான போராட்டங்களுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. அப்படியொரு போராட்டத்தையே தியாக தீபம் திலீபன் அவர்கள் முன்னெடுத்தார். எழுக தமிழ் என்ற எழுச்சிப் போராட்டத்தின் மூலம் தாயகம், மீண்டும் ஒருமுறை தனது இறைமை தாகத்தை எடுத்துரைத்துள்ள நிலையில், தியாக தீபத்தின் சுதந்திரப் புரட்சிக் கனவு மெய்யாகியுள்ளது.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று தியாக தீபம் திலீபன் அவர்கள் உணர்வும், எழுச்சியும் மிகுந்த தன் வார்த்தைகளை இந்த மண்ணில் எழுதிச் சென்றுள்ளார். திலீபன் அவர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் உன்னதமான போராளி. மெலிந்த அந்த தேகமும், முடி கலைந்த முகமும், தோளில் ஒரு துவக்கும் எளிதில் ஈழச் சமூகம் மட்டுமல்ல, உலகத் தவர்களும் மறந்துவிட முடியாத தோற்றம். அகிம்சை என்ற சொல்லின் வடிவம் அவர். காந்தி தேசத்தின் போலி அகிம்சை முகத்தைக் கிழித்தெறிந்த தியாகத்தின் நினைவு நாட்கள் கடந்து செல்கின்றன.

பாடசாலையில் இன்றைய புதிய தலைமுறையினர் தியாக தீபம் திலீபன் அவர்கள் பற்றி விசாரிப்பார்கள். பன்னிரு நாட்களும் ஒரு துளிகூட நீர் அருந்தாது தமக்காய் அன்று நோன்பிருந்த திலீபன் அவர்களின் தியாகத்தை மெச்சுகின்ற பல குழந்தைகளுக்கு இன்று திலீபன் என்று பெயர். ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் அதாவது 1987இல் தியாக தீபம் அவர்கள் உண்ணா நோன்பு இருந்தார். அதற்கு பிந்தைய தலைமுறைகள் மத்தியில் அவர் மிகவும் நேசிப்புக்குரிய போராளியாக காணப்பட்டார். இன்று ஈழ மண்ணில் பிறக்கிற குழந்தைகளின் மனங்களையும் வருடும் இப் போராளி, தனது போராட்டத்தால் ஏற்படுத்திய அழியாச் சாதனை இதுவெனலாம்.

இராசையா பார்த்திபன் என்ற இயற்பெயரைக் கொண்ட லெப்டினன் கேணல் திலீபன் அவர்கள், கார்த்திகை 27, 1963ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஊரெழுவில் பிறந்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக இருந்த தியாக தீபம் திலீபன் அவர்கள் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். அவர் கருத்தியல் ரீதியாக ஆழமான புரிதல் கொண்ட ஒரு போராளியாக இருந்தார். பால்நிலை மற்றும் சமூக சமத்துவக் கண்ணோட்டம், பிற்போக்குத்தனங்களை உடைக்கும் பார்வை கொண்ட திலீபன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சனநாயக முகமாக எதிரிகளையும் வென்றவர். அவர் ஆற்றிய உரை ஈழ மக்களை இன்றும் நம்பிக்கையும், எழுச்சியையும் கொள்ளச் செய்பவை.

ஆயுதப்போராளியான அவர் அகிம்சையைக் கையில் எடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உன்னதமான போக்கினை இவ் உலகிற்கு வெளிப்படுத்தினார். புரட்டாசி 15, 1987 இல் இந்திய அரசிற்கு எதிராக தனது உண்ணா நோன்புப் போரை ஆரம்பித்தார் தியாக தீபம் திலீபன் அவர்கள். அவர் வலியுறுத்திய ஐந்து அம்சக் கோரிக்கைகள் இன்றும் ஈழ நிலத்தின் கோரிக்கைகளாக இருக்கின்றன.

1. **மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும், கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.**
2. **சிறைக் கூடங்களிலும், இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.**
3. **அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.**
4. **ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.**
5. **தமிழர் பிரதேசங்களில் புதிதாக காவல் நிலையங் களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.**

முதலிய ஐந்து கோரிக்கைகளை திலீபன் வலியுறுத்தினார்.

ஈழ இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வு எனக் கூறி, இலங்கை — இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு, 13ஆவது திருத்தச்



சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்திய இராணுவத்தினர் அமைதிப்படை என்ற போர்வையில் ஈழத்திற்கு வந்தனர். ஆனால் சிங்கள அரசின் தமிழ் இன — நில அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முடுக்கி விடப்பட்டிருந்தன. இதற்கு எதிராகவே தியாக தீபம் உண்ணா நோன்பினை மேற்கொண்டார். ஈழ இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிய இந்த அரசின் படைகளது பாதுகாப்புடன் தமிழ் இன நில அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவின் போலியான அகிம்சை முகத்தை தோலுரித்துக் காட்டினார் தியாகி திலீபன்.

திலீபன் முன்வைத்த, ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளாமல், சிங்கள அரசுக்கு துணை செய்தது. அதன் இன நில அழிப்புச் செயல்களுக்கு ஒத்தாசை புரிந்தது. தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா நோன்பை தொடங்கியபோது, ஒட்டு மொத்த ஈழமும் பசியிருந்தது. நல்ல முடிவு வரும், திலீபன் மீண்டு வருவார் என்று காத்திருந்தது. தன்னை உருக்கி உருக்கி தமிழர்களின் கோரிக்கையை வலுப்படுத்தினார் திலீபன். மெலிந்த தேகம், ஈர்க்கும் புன்னகை, புரட்சிக் குரல், இந்திய அரசின் துரோகத்தால் ஈழ மண்ணில் சாய்ந்தது. உண்ணா நோன்பின் 12ஆவது நாள், 1987ஆம் ஆண்டு புரட்டாதி 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு ஈழ மண் பெற்றெடுத்த ஒப்பற்ற போராளி திலீபன் அவர்கள், தன்னுடைய 23ஆவது வயதில் வீர மரணம் எய்தினார். இன்றைய காலத்தில், திலீபன் அவர்களை நினைவு கூருகின்றபோது இரண்டு விடயங்களை வலியுறுத்த வேண்டியுள்ளது, அல்லது பின்பற்ற வேண்டியுள்ளது. ஒன்று, தன்னலமற்ற அரசியல் எமக்கு அவசியமானது. மற்றையது, திலீபனின் கனவை மெய்ப்பிப்பதுதான் அவருக்கு செய்யும் மரியாதை. அவரை நினைவுகூர்வதற்கு அர்த்தமானதாயிருக்கும். 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர், அதாவது ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்ட பின்னர், ஈழத் தமிழ் மக்கள் நம்பிக்கையற்ற, சூன்யமான அரசியல் சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

திலீபன் போன்ற போராளிகள் தன்னலமற்ற அரசியலால் ஈழப் போராட்டத்தை உலகிற்கு அறிமுகப் படுத்தினர், எடுத்துரைத்தனர்.

அந்தப் போராட்டத்தை ஒரு அசியல் போராட்டமாக, ஒரு அரசியல் இயக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. திலீபன் போன்ற உன்னதமான போராளிகள் சுமந்த கனவை, எடுத்து வந்த ஆயுதத்தை தொடர்ந்து ஏந்திச் செல்வதுதான் இன்றைய காலத்தின் அவசியமாகும். தன்னலமற்ற, ஆழமான புரிதல் கொண்ட, தமிழ் ஈழ நிலத்தின் ஆன்மாவை நேசிக்கும் இளைஞர்களும், அரசியல் தலைமைகளுமே எமக்கு அவசியமானவை. திலீபன் போன்ற போராளிகளை நினைவுகூரும்போது, நம்மையும், நமது நிலத்தின் இன்றைய சூழலையும் குறித்து ஆழமாக சிந்திப்பது அவருக்குச் செய்யும் அஞ்சலியும், அவரை நினைவுகூர்வதன் அர்த்தமுமாக இருக்கும்.

எழுக தமிழ் போராட்டமானது, இந்த ஆண்டு தியாக தீபத்திற்கு செய்யப்பட்ட ஒரு எளிமையான அஞ்சலி எனலாம். இத்தகைய மக்கள் போராட்டங்களை தமிழ் அரசியல் கட்சிகள் குழப்புவது அறமாகாது. இன்றைய ஈழத்தில் சனநாயகப் போராட்டங்களே மிகவும் அவசியமாகியுள்ளது. அவற்றை ஒழுங்குபடுத்தும் நிலையில் எமது தலைமைகள் இல்லை. மக்கள் தமது கோபத்தை, கண்ணீரை, வெஞ்சினத்தை வெளிப்படுத்த வழியின்றி நிற்கின்ற காலம். இந்தக் காலத்தில் தியாக தீபத்தின் வழிமுறைகளை கையில் எடுப்பது, இளைய தலைமுறையினரைக்கூட சரியான வழியில் கொண்டு செல்ல உதவும். தியாக தீபம் விதைத்த, சுதந்திரத்திற்கான எண்ணங்களை முளைவிட செய்வது தான் இன்றைய காலத்தின் அவசிப் பணி எனலாம்.

# பணம் சம்பாதிக்கும் அரசியல் நீடித்தால் மக்கள் கிளர்ந்தெழும் காலம் வரலாம்

**வாரத்துக்கொரு கேள்வி வரிசையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இவ்வார கேள்விக்கு பதிலளித்துள்ளார்.**

**எழுக தமிழ் பேரணியை வெற்றிகரமாக முடித்து விட்டீர்கள். உங்கள் அடுத்த இலக்கு என்ன?**




எனக்கு சார்பானவர் கேட்கும் கேள்வியா? அல்லது ஒரு எதிர்மறை விமர்சகர் கேட்கும் கேள்வியா? என்று எனக்குப் புரியவில்லை. என்றாலும் பதில் தர எத்தனிக்கின்றேன். அண்மைய எழுக தமிழ் வெற்றி பெற்றது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. எம்முடன் நகமும் சதையுமாகச் சேர்ந்திருந்து தற்போது போர்க்கொடி தூக்குவோர்கூட மனதின் அந்தரங்கத்தில் இதனை ஏற்றுக்கொள்வர். ஆனால் வெற்றி என்பது எனது தனிப்பட்டசொத்து அல்ல. எனது கட்சியின் வெற்றியுமல்ல. எமது கட்சியினர் பலர், எமது நலன் விரும்பிகள் பலர் இரவு பகல் பார்க்காது மக்களோடு மக்களாய் சேர்ந்து நின்று உழைத்தமை உண்மைதான். அவ்வாறே நேசக் கட்சிகளின் உறுப்பினர்களும் செய்தார்கள்.

இவர்கள் யாவரும் தமிழ் மக்கள் பேரவை சார்பிலேயே தமது உதவிகளை வழங்கினார்கள். தமிழ் மக்கள் பேரவையில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒருமித்து செயற்பட்டமையால் ஏற்பட்டதே இந்த வெற்றி.

வணிகர் சங்கங்கள், வியாபாரிகள் எனப் பலரும் தமது நட்டத்திலேயே எமக்கு வெற்றியை வழங்கினார்கள். அவர்கள் சேவை மகத்தானது. கிழக்கில் இருந்தும் வன்னியில் இருந்தும் தீவுப் புறங்களில் இருந்தும் எம்மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து யாழ்.குடாநாட்டு மக்களுடன் சேர்ந்தே எழுக தமிழை வெற்றியடையச் செய்தார்கள்.

எனது பேச்சு வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருந்ததென்று சொன்னால் அதுவும் கூட்டு முயற்சியே. ஆங்கில மொழி பெயர்ப்பு மட்டும் முழுமையாக என்னுடையது என்று கூறலாம். ஆகவே வெற்றி என்பது எழுக தமிழ் பேரணியில் பங்கு பற்றிய ஒவ்வொருவருக்கும் உரியதொன்றே. தமிழ் மக்கள் பேரவையின் மற்றுமொரு வெற்றியே. என்னைத் தனிப்பட்டுக் குறிப்பிட்டு எம்முள் வேற்றுமையை ஏற்படுத்தாதீர்கள். என்றாலும் எழுக தமிழ் எமக்குப் பாடங்கள் பலவற்றைத் தந்துதவியுள்ளன. உதாரணத்திற்கு வார இறுதியில் வைக்க வேண்டிய பேரணியை வாரநாளான திங்கட்கிழமைக்கு மாற்றியமை பிழை என்றே சொல்லத் தோன்றுகின்றது. பல்கலைக் கழக மாணவ, மாணவியர் வார நாள்களிலேயே வருகை தருவார்கள் எனப்பட்டது. ஆனால் அங்கு நடைபெறும் வேலை நிறுத்தம் பல்கலைக்கழக மாணவ, மாணவியரின் வருகையைத் தடைப்படுத்தியமை, எம்மால் ஏற்கனவே கணக்கில் எடுக்கப்பட முடியாது போய் விட்டது.

வாரநாள் பேரணி ஆசிரிய ஆசிரியைகள், சிரேஷ்ட மாணவர்கள், அரசாங்க அலுவலர்கள் மேலும் மற்றோர் பலரை வரவிடாமல் தடுத்து விட்டது. வார இறுதி நாட்கள் என்றால் அவர்கள் யாவரும் பங்குபற்ற இடமளித்திருக்கும். எனினும் எமது வாரநாள் பேரணி வேறொரு சமூக அலகை முன்னுக்குக் கொண்டு வந்தது. தமது நட்டத்தைப் பாராது கடைகளை இழுத்து மூடிய எமது வணிகப் பெருமக்களையே நான் குறிப்பிடுகின்றேன். மேலும் ஒரு வேலைநாளில் தெருக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. இ.போ.ச. வேலை நிறுத்தமும் அதற்கொரு காரணம். எமது மக்கள் பலர் கிட்டிய இடங்களில் இருந்து வராமைக்கு அதுவும் ஒரு காரணம்.

அடுத்த இலக்கு பற்றிக் கேட்டிருக்கின்றார் கேள்வியாளர். எமது அரசியலின் போக்கில் மாற்றம் ஏற்பட நாம் உழைக்கவேண்டும். படித்த, பண்புள்ள, ஊழலற்ற, நடுத்தர வயது மக்களை / இளைஞர், யுவதிகளை அரசியலில் நாம் சேர்க்க வேண்டும். அவர்கள் பலதும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

எதைப் பற்றியும், சொல்லித் தெரிந்து கொள்ளும் பக்குவம் பெற்றிருக்க வேண்டும். மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழர்களின் வருங்காலம் பற்றியும் இந்நாட்டின் எதிர்காலம் பற்றியும் வலுவான சிரத்தை கொண்டவர்களாக இருக்க வேண்டும். கொள்கைகளில் பற்றுறுதி கொண்டவர்களாக இருக்க வேண்டும். பொது விடயங்கள் சம்பந்தமான தமது அக்கறையின்மைக்கு நல்லவர்கள் செலுத்தும் விலை துஷ்டர்களால் ஆளப்படுவதே என்று கூறினார் ப்ளேட்டோ என்ற கிரேக்க தத்துவஞானி. இதுவரை காலமும் அக்கறையின்றி எமது நன்மக்கள் இருந்தபடியால்தான் துஷ்டர்கள் அரசியலில் இடம் பிடித்துள்ளார்கள். இனியாவது அந்த நிலையை மாற்ற எம்மக்கள் முன்வர வேண்டும். என்னுடைய சட்டத்தரணி சிங்கள நண்பர் ஒருவர் 1977ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றியீட்டி பிரதியமைச்சர் பதவியும் பெற்றார். அவரை பாராட்டி விட்டு அடுத்து என்ன செய்யப் போகின்றாய் என்று அவரிடம் கேட்டதற்கு அவர் சிங்களத்தில் என்ன ஓய்! நான் தேர்தலுக்கு செலவழித்த பணம் முழுவதையும் திரும்பப் பெற வேண்டாமா? என்றார். அப்படியே அவர் செலவழித்த பணத்தையும் விட பல மடங்கு பணம் அரசியலில் சம்பாதித்தார். கடைசியில் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டார்.

தேர்தல் என்பது ஒரு கேடு விளைவிக்கின்ற வட்டமாக மாறிவிட்டது. தேர்தலுக்கு செலவு, செலவை ஈடுசெய்ய பதவியில் ஊழல், ஊழல் நிகழ்த்தவே தேர்தல் என்று ஆகிவிட்டது. தந்தை செல்வா, திரு.வன்னியசிங்கம் போன்றவர்கள் தம் கைவசம் இருந்தவற்றை மக்களுக்குச்சேவை செய்யப் புகுந்து இழந்தார்களே ஒழிய அரசியல் அவர்களைப் பணக்காரர்கள் ஆக்கவில்லை. எமது அரசியல் என்பது பணம் சம்பாதிக்க ஒரு சிறந்த வழியாக மாறிவிட்டது. இன்றைய அரசியல் நிலை தொடர்ந்தால் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து வன்முறைகளில் ஈடுபடக்கூடிய காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆகவேதான் படித்த, பண்பான, ஊழலற்ற இளைஞர்கள், நடுத்தர வயதினர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று கூறுகின்றேன். அரசியலுக்கு அறிவிலும் பார்க்க அன்பே மிக்க அவசியம் என்பது எனது கருத்து. மக்கள் மீது அன்பிருந்தால் அரசியல்வாதிகள் சாதிப்பார்கள். இல்லையென்றால் சம்பாதிப்பார்கள். ஆனால் சாதிக்கமாட்டார்கள். ஆகவே எனது இலக்கு பொறுப்பான தமிழ் இளைஞர்களை/நடுத்தர வயதினர்களை, பணியனுபவம் பெற்றவர்களை மாவட்டம் தோறும் கண்டுபிடிப்பதே. தேர்தல்கள் வெல்வதிலும் பார்க்க எமது அரசியலுக்கு ஏற்ற பற்றுறுதியுள்ள வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பது அவசியம். தோதான வேட்பாளர்கள் கிடைத்தால் தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.




எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கு ஒரு மொழியே தெரியும். பிறமொழி பேசுபவர்களுடன் அவர்கள் எந்தத் தொடர்பையும் வைத்துக்கொள்வதில்லை. மனம் விட்டுப் பேசுவதில்லை. எமது குறைகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. இவ்வாறு தனியறைகளில் வசித்துக் கொண்டு நாடாளுமன்றம் செல்லும் நிலைமாற வேண்டும். சரிசமனாக எவருடனும் எதிர்த்து நின்று பேசுந் தன்னம்பிக்கை எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வர வேண்டும். ஆகவே படித்த, பண்புள்ள, ஊழலற்ற இளைஞர்களை, நடுத்தர வயதினரை எம்முடன் சேருமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். நிச்சயம் அவர்கள் வந்து எம்முடன் சேர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

# ரணிலைப் பாதுகாக்கத் தவறிய சுமந்திரனின் 'இராஜதந்திரம்'

பூமிகன்

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத் தானாம் ஆண்டி" என்பது போல, ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கிறேன் என சுமந்திரன் நகர்திய இறுதிக்காய் நகர்த்தல் ரணிலுள்ள நெருக்கடியை மேலும் தீவிரப் படுத்திவிட்டது. சுமந்திரனின் "கதையைக்" கேட்டு விஷேட அமைச்சரவையைக் கூட்டுமாறு சனாதிபதி மைத்திரியிடம் கோரிய ரணில், இப்போது கட்சிக்குள் புதிய நெருக்கடியையும் எதிர்கொள்ள வேண்டியவராக உள்ளார். ஐ.தே.க எம்.பிக்கள் சுமந்திரன் மீது கடும் சீற்றத்தில் உள்ளார்கள்.

ரணில் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்தே வியாழன் மாலை அமைச்சரவை கூட்டப்பட்டது என மைத்திரி உறுதியாகக் கூறுகிறார். மைத்திரியே இதனைக் கூட்டியதாக ரணில் சொல்கிறார். இதற்கான அறிவித்தல் வியாழன் காலைதான் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டது. வெளி மாவட்டங்களிலிருந்த அமைச்சர்கள் பலரும் அவசரமாக என்னவோ, எதுவோ என விழுந்தடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்கள்.

மறுபுறம் சஜித் தரப்பினர் அதனை முறியடிப்பதற்கான செயலில் இறங்கினார்கள். அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் ஐ.தே.க அமைச்சர்கள் அலரிமாளிகையில் ரணிலை சந்தித்தார்கள். பிரேரணையை எதிர்க்க போவதாக சஜித்துக்கு ஆதரவான அமைச்சர்கள் உறுதியாகக் கூறினார்கள். இதன்பின் அமைச்சரவை கூடிய போது சஜித் தரப்பு ரணிலின் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததால் திட்டம் கைவிடப்பட்டது

நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை இல்லாதொழிப்பது என்பது இலகுவானதல்ல. பல தடைகளைத் தாண்ட வேண்டும். முதலில் அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை. அடுத்து பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அது நிறைவேற்றப்பட வேண்டும். மூன்றாவது தடை சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளளப்பட வேண்டும். ரணிலால் முதலாவது தடையையே தாண்ட முடியாமல் போய்விட்டது.

இந்த மூன்றும் நடைபெற்றால், கார்த்திகை 16இல் சனாதிபதித் தேர்தல் நடைபெறாது. இதன் மூலம் நிறைவேற்று அதிகார பிரதமராக தொடர்ந்தும் இருந்து 2020 ஆவணியில் பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதுதான் ரணிலின் திட்டம். சுமந்திரன்தான் இதற்கான திட்டத்தை வகுத்துக்கொடுத்தவர். மைத்திரியையும், ரணிலையும் மாறிமாறிச் சந்தித்து இருவரது சம்பதத்தையும் பெற்றுக்கொண்ட பின்னரே சட்டரீதியாக இதற்கான பத்திரங்களை சுமந்திரன் தயாரித்துக்கொடுத்திருக்கின்றார்.

சுமந்திரனின் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் ரணிலுக்கு சாதகமான அம்சங்களும் இருந்தன. பாதகமானவையும் இருந்தன. சாதகமானவை என்றால் — மகிந்த இந்த முயற்சிக்கு மறைமுகமான ஆதரவை கொடுக்கக் கூடியவராக இருந்தார். காரணம் இன்னொரு சனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாது. சனாதிபதி ஆட்சி முறை இல்லாத ஒழிக்கப்பட்டால் பிரதமர் தான் அதிகாரம் மிக்கவராக இருப்பார். பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பதவியை தன்னிடம் எடுத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை மகிந்தவிடம் இருந்தது.

மைத்திரியும் மீண்டும் மக்களால் தெரிவாகும் சனாதிபதியாக வர முடியாது என்ற நிலைமையில் நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை இல்லாது ஒழிப்பதற்கான ஆதரவை வழங்க தயாராக இருந்தார். அவ்வாறு இடம்பெற்றால், அதிகாரங்களற்ற சனாதிபதியாக தான் தொடர்ந்தும் இருந்திருக்க முடியும் என அவர் நினைத்திருக்கலாம். இப்போது இருப்பதைப் போலவே எம்.பிக்களின் ஆதரவைப் பெற்று



வெறுமனே சம்பிரதாயபூர்வமான சனாதிபதிப் பதவியில் தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கை சுமந்திரனால் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

கடந்த நான்கு சனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்ட அனைவரும் நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவியை இல்லாது ஒழிப்பதாக கூறியே வாக்குகளை கேட்டிருந்தார்கள். பின்னர் அதனைச் செய்யவில்லை. புதிய அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சியில் கூட நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவி ஒழிப்பு என்பது முக்கிய இடத்தைப் பெறவில்லை. இந்த நிலைமையில்தான் ஜே.வி.பி ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருந்தது. அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவி இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது ஜே.வி.பி முன்வைத்த யோசனையாக இருந்தது.

அதனைக் கவனத்தில் எடுக்காத பிரதான அரசியல் கட்சிகள் சனாதிபதி வேட்பாளர் தெரிவில் உருவாகிய நெருக்கடியை தொடர்ந்தே அதனைக் கையில் எடுத்தன. குறிப்பாக சனாதிபதி வேட்பாளராக சஜித்தை அனுமதிக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கும் ரணில், அந்த முயற்சியில் தன்னுடைய நிலைமையை பலவீனமடைந்து செல்வதை உறுதியாகத் தெரிந்துகொண்ட நிலைமையிலேயே இறுதி கட்ட முயற்சியாக இதனை முன்னெடுத்தார் என்பது இரகசியமான ஒன்றல்ல.

இதில் கடுமையான எதிர்ப்புகள் உருவாகும் என்பது ரணிலால் எதிர்பார்க்கப்பட்டதுதான். குறிப்பாக சஜித்துக்கு ஆதரவாக உள்ள அமைச்சர்களும், பங்காளிக் கட்சிகளான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி என்பனவும் இதனை கடுமையாக எதிர்க்கும் என்பது தெரிந்திருந்தது. ஆனால், பங்காளிக் கட்சிகளினதும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினதும் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என ரணிலுக்கு சுமந்திரன் உறுதியளித்திருந்தார். ரணிலும் நம்பியிருந்தார். அந்த நம்பிக்கையில்தான் அமைச்சரவையை அவசரமாகக் கூட்டுமாறு மைத்திரியை அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவையிலும், பாராளுமன்றத்திலும் இதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியுமா? என இதன்போது மைத்திரி கேட்டுள்ளார். "ஆம், ஹக்கீம், மனோ, சம்பிக்க போன்றவர்களின் ஆதரவு கிடைக்கும்" என இதற்கு ரணில் பதிலளித்திருக்கின்றார். அதனையடுத்தே வியாழன் பகல் சனாதிபதி செயலகத்திலிருந்து விஷேட அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னதாக அலரி மாளிகையில் அமைச்சர்களை ரணில் சந்தித்த போதே, தன்னுடைய திட்டம் நிறைவேறாது என்பதை ரணில் தெரிந்துகொண்டார்.

''நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்யும் எந்த ஒரு முயற்சியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே செய்யப்பட வேண்டும்" என சஜித் சுட்டிக்காட்டினார். "இவ்வளவு காலமும் இதனைச் செய்யாமல் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் இவ்வாறு செய்வது மக்கள் மத்தியிலும் அதிருப்தியை உண்டுபண்ணும்" எனவும் அவர் தெரிவித்தார். மங்கள இந்த விடயத்தில் ரணிலும் இதன்போது கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

ரணிலுக்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டையே கூட்டமைப்பு எடுத்திருந்தது. சனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கான ஆதரவையும் அவர்கள் வழங்கினார்கள். குறிப்பாக இதற்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை பேச்சாளர் சுமந்திரன் வழங்கியிருந்தார். பாராளுமன்றத்திலும் தாம் ஆதரவளிப்பதாக சுமந்திரன் உறுதியளித்திருந்தார். மைத்திரிக்கும், ரணிலுக்கும் இடையில் பாலமாகவும் அவரே செயற்பட்டிருந்தார். மனோ, ஹக்கீம், ரிசாத், சம்பிக்க போன்றவர்களும் ஆதரவளிப்பார் என சுமந்திரன் கொடுத்த கயிற்றை விழுங்கியே ரணில் இங்கு அவமானப்பட்டார்.

அது சரி, சுமந்திரனுக்கு இதில் என்ன அக்கறை என வாசகர்கள் கேட்கலாம். நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவி இல்லாதொழிக்கப்பட்டால் நிறைவேற்று அதிகார பிரதமராக ரணில் இன்னும் ஒரு வருடத்துக்கு பதவியிலிருக்க முடியும். அந்தக் காலப்பகுதிக்குள் தற்போது அரைகுறையாக உள்ள புதிய அரசியலமைப்பு யோசனையை கொண்டுவந்து நிறைவேற்றிவிடலாம் என்பது அவரது கனவு. புதிய அரசியலமைப்பில் என்ன இருக்கிறதோ இல்லையோ சுமந்திரனின் எதிர்கால அசியல் அதில்தான் இருக்கிறது.

# எழுக தமிழ் 2019 யாருக்கு வெற்றி? யாருக்குத் தோல்வி?

நிலாந்தன்

கொழும்பில் தாமரைக் கோபுரம் திறந்து வைக்கப்பட்ட அதேநாளில் யாழ்ப்பாணத்தில் இரண்டாவது எழுகத்தமிழ் இடம்பெற்றது. தாமரைக் கோபுரம் எனப்படுவது இலங்கைத் தீவு சீனமயப்பட்டு விட்டதைக் குறிக்கும் தென்னாசியாவின் மிக உயரமான குறியீடுகளில் ஒன்று. இலங்கைத் தீவின் பெருமைக்குரிய அடையாளங்களாக இது வரை இருந்து வந்த புராதன சின்னங்களை மீறி நாட்டின் ஒரு நவீன அடையாளமாக அது உயர்த்திக் காட்டப்படுகிறது. சீனா இலங்கைத் தீவின் வரை படத்தை மாற்றி விட்டது. நாட்டுக்கு ஒரு புதிய அடையாளத்தையும் வழங்கியிருக்கிறது.

தாமரைக் கோபுரத்தைப் பற்றி வெளிவந்த பெரும்பாலான கார்ட்டூன்களில் கடன்காரர்களாக மாறியிருக்கும் இலங்கையர்களின் வறுமையின் பின்னணியில் எடுப்பாக நிமிர்ந்து நிற்கும் ஒரு கோபுரமாகவே அது சித்தரிக்கப்படுகிறது. அதேசமயம் சிறிய அழகிய இலங்கைத் தீவு பேரரசுகளின் குத்துச்சண்டை களமாக எதிர்காலத்தில் மாறக்கூடும் என்பதை உணர்த்தும் ஒரு கட்டடக்கலை சார் அரசியற் குறியீடாகவும் காணப்படுகிறது.




இவ்வாறு இலங்கைத்தீவு அதிகம் சீன மயப்பட்டதன் ஒரு குறியீடாக ஓர் உயர்ந்த கோபுரம் திறக்கப்பட்ட அதேநாளில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் எழுக தமிழ் இடம்பெற்றது. பேரரசுகளின் உலகளாவிய மற்றும் பிராந்திய வியூகங்களிட் சிக்கி சின்னாபின்னமாகிய ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் சிறிய எதிர்ப்பே எழுக தமிழ் ஆகும்.

விரைவில் ஓர் அரசு தலைவருக்கான தேர்தல் நடக்கவிருக்கிறது. அதைத் தொடர்ந்து மேலும் இரு தேர்தல்கள் நடக்கக் கூடும். இத்தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகளே பெருமளவிற்கு தீர்மானிக்கும் வாக்குகளாக மாறக்கூடும். கேந்திர முக்கியத்துவம் மிக்க வாக்குகளை பெற்ற மக்கள் தமிழர்கள். தமது கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து ஐக்கியப்பட்டு கட்டுறுதி மிக்க ஒரு திரளாக மாறி கேந்திர முக்கியத்துவம் மிக்க உபாயங்களை வகுக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் எழுக தமிழ் இடம்பெற்றது.

ஆனால் இனப்படுகொலையில் தப்பிப் பிழைத்து மிஞ்சியிருக்கும் ஈழத் தமிழர்கள் அவ்வாறு கேந்திர முக்கியத்துவம் மிக்க தந்திரோபாயங்களை இப்போதைக்கு வகுக்கப் போவதில்லை என்று கருதும் அளவுக்கே எழுக தமிழ் நிகழ்வுக்கு முன்னும் பின்னும் நடந்து வரும் உரையாடல்களும், விவாதங்களும், வசைகளும், அருவருப்பான முகநூற் குறிப்புகளும் உணர்த்துகின்றன. எழுக தமிழ் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று விக்னேஸ்வரனுக்கு ஆலோசனை கூறியது யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒரு புலமையாளர். யாழ்ப்பாணத்திலுள்ள உயர்கல்வி நிறுவனமொன்றின் பொறுப்பான பதவியை வகிக்கும் இவருடைய ஆலோசனையை விக்னேஸ்வரன் ஏற்றுக்கொண்டார். அதன் விளைவே 'எழுக தமிழ்—2019' ஆகும்.

அதில் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் எழுக தமிழ் வெற்றி. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் அனேகமானவை சிறுதிரள் வடிவிலானவை. அவற்றோடு ஒப்பிடுகையில் கடந்த திங்கட்கிழமை சுமாராக ஐயாயிரத்துக்கும் குறையாத மக்கள் முற்ற வெளியில் திரண்டார்கள். அப்படி ஒரு பெரிய திரட்சி ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பை காட்ட முடிந்தது என்பது வெற்றிதான்.

மேலும் தமிழகத்திலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ எழுக தமிழுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இது விடயத்தில் ஓரளவுக்கேனும் பெருந்தமிழ் பரப்பில் ஓர் ஒருங்கிணைப்பு காணப்பட்டது. அதுவும் ஒப்பீட்டளவில் ஒரு வெற்றியே.

எனினும் எழுக தமிழை ஒழுங்குபடுத்திய பேரவையின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் அது காணாது. அதை ஒழுங்கு படுத்திய கட்சிகளின் நோக்குநிலையில் இருந்து பார்த்தாலும் அதை எதிர்த்த, குழப்பிய தரப்புக்களுக்கு அது அதிர்ச்சியூட்டும் ஒரு திரட்சி அல்ல.

இம்முறை எழுக தமிழுக்கு பல பாதகமான அம்சங்கள் இருந்தன.

முதலாவது — பேரவை பலவீனமாக காணப்பட்ட ஒரு சூழலுக்குள் இம்முறை எழுக தமிழ் ஒழுங்கு செய்யப்பட்டது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இருந்து பேரவை தனக்குள் அங்கமாக காணப்பட்ட கட்சிகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் பலத்தை இழந்துவிட்டது. முன்னைய எழுக தமிழில் ஒன்றாக காணப்பட்ட கட்சிகள் இம்முறை பிரிந்து நின்றன. சுரேஷ் பிரேமச்சந்திரன் கட்சியையும் சித்தார்த்தனின் கட்சியையும், அகற்றினால்தான் எழுக தமிழில் இணைவோம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறியது. ஆனால் சித்தார்த்தன் ஏற்கனவே வெளியேறிவிட்டார். இந்நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐ அகற்ற பேரவை விரும்பவில்லை. இதனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அரவணைக்கும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. மாற்று அணிக்குள் ஏட்பட்ட முரண்பாடுகள் சந்திக்கு வந்து இரு தரப்பும் மாறி மாறி குற்றச் சாட்டுக்களை முன்வைத்தபோது அது மக்களைக் குழப்பியது. மக்கள் மத்தியில் சலிப்பும், விரக்தியும் எற்பட்டது. இது முதலாவது பாதகமான அம்சம்.

இரண்டாவது பாதகமான அம்சம்— எழுக தமிழ் என்ற எதிர்ப்பு வடிவத்தின் போதாமையும் தொடர்ச்சியின்மையும். எழுக தமிழைத் தாண்டி புதிய போராட்ட வடிவம் ஒன்றைக் கண்டுபிடித்திராத வெற்றிடத்திலேயே இம்முறை எழுக தமிழ் முன்னெடுக்கப்பட்டது. அதைக் கண்டு பிடிப்பதென்றால் பேரவை தன்னைப் புனரமைக்க வேண்டும்.

மூன்றாவது பாதகமான அம்சம் — பேரவை எல்லா மாவட்டங்களையும் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு. இதுவும் பேரவையின் புனரமைப்போடு சம்பந்தப்பட்ட விடயம். இதிலும் கடைசி நேர முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை முழு வெற்றி பெறவில்லை. எனினும் வெளி மாவட்டங்களில் இருந்து கணிசமான தொகையினர் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றினர். கிட்டத்தட்ட அரைவாசிப் பேருக்கு மேல்.

நாலாவது பாதகமான அம்சம்— இதுவும் பேரவையின் புனரமைப்போடு சம்பந்தப்பட்ட விடயம். பேரவைக்கு உள்ளேயே காணப்பட்ட சில பொது அமைப்புகள் எழுக தமிழில் முழுமனதோடு ஒத்துழைக்கவில்லை. உதாரணமாக ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கம் அதில் முழுமையாகப் பங்கேற்கவில்லை. ஐங்கரநேசன் முதலில் ஒப்புக் கொண்டபடி சில பொது அமைப்புகளை எழுக தமிழில் ஒருங்கிணைக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. ஐங்கரநேசனுக்கும், விக்னேஸ்வரனுக்கும் இடையிலான புரிந்துணர்வில் ஏற்பட்டுள்ள நெருடல் காரணமாகவே அவர் எழுக தமிழில் முழுமனதோடு ஈடுபடவில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையில் விக்னேஸ்வரனுக்கு அரணாக நின்ற காரணத்தாலேயே ஐங்கரநேசன் அதிகமாக தாக்கப்பட்டார். ஆனால் விக்னேஸ்வரன் கட்சி தொடங்கியதும் அதற்குள் அவர் ஐங்கரநேசனுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை என்று தெரிகிறது. இதிலிருந்து தொடங்கிய இடைவெளி மேலும் அதிகரித்து வருவதன் விளைவாகவே ஐங்கரநேசன் எழுக தமிழில் முழுமனதோடு பங்கேற்கவில்லை என்று கருதப்படுகிறது. எனினும் அவர் நல்லூரில் பேரணி தொடங்கியபோது அதில் காணப்பட்டார்.

ஐங்கரநேசன் போலவே பல்கலைக்கழகமும் பேரவைக்கு நிபந்தனைகளை முன்வைத்தது. அதன்படி கட்சிகளுக்கு முதன்மை வழங்கக் கூடாது என்று அவர்கள் கேட்டார்கள். பேரணிக்கு முதல் நாள் இரவு வரையிலும் நிலைமை சுமூகமாகவில்லை. மாணவர்களின் கோரிக்கையை ஏற்பதில் பேரவைக்கு சங்கடங்கள் இருந்தன. ஏனெனில் விக்னேஸ்வரனின் கட்சியும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியும்தான் எழுக தமிழை ஒழுங்குபடுத்துவதற்காக கடுமையாக உழைத்தன. தொடக்கத்திலிருந்தே உழைத்த கட்சிகளை நீக்கிவிட்டு முடிவெடுக்க பேரவை தயங்கியது.

மாணவர்கள் தொடக்கத்திலிருந்தே பேரணியை ஒழுங்குபடுத்துவதில் முழுமூச்சாக பங்கேற்று இருந்திருந்தால் கட்சிகளை

தொடர்ச்சி 10ம் பக்கம்...

**09ம் பக்கத் தொடர்ச்சி...**

முந்திக்கொண்டு அவர்களே பேரணியை முன்னெடுத்திருப்பார்கள். மாணவர்கள் மிகவும் பிந்தியே பேரவையோடு ஒத்து வந்தார்கள். தவிர பல்கலைக்கழகத்தில் மாணவர்களும் இல்லை. ஏனெனில் கடந்த வாரத்திலிருந்து பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேலைநிறுத்தம் செய்து வருகிறது. ஆர்பாட்டப் பேரணியில் நூற்றியைம்பதுக்கும் குறையாத மாணவர்களும் ஆசிரியர்களுமே கலந்து கொண்டார்கள்.

பேரணி முடிந்த கையோடு யாழ் பல்கலைக்கழகத்தின் துறைசார் தலைவர் ஒருவர் என்னோடு பேசினார். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்திற்கு பேரவை வழங்கிய ஒரு வாக்குறுதியின்படி கட்சிகளுக்கு முதன்மை வழங்குவதில்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது என்றும், அந்த அடிப்படையிலேயே ஆசிரிய சங்கம் பேரணியில் பங்கு பற்றியது என்றும், ஆனால் கடைசி நேரத்தில் மேடையில் கட்சித் தலைவர்களை பேச வைத்து விட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். பேரவை ஆதரவு கேட்டபோது பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தில் இரண்டு விரிவுரையாளர்கள் கடுமையாக எதிர்ப்புக் காட்டியதாகத் தெரிகிறது. அவ்வெதிர்ப்பை மீறி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை சேர்ந்தவர்கள் பேரணியில் பங்குபற்றினார்கள்.

ஆனால் பேரவைக்காரர்கள் கூறுகிறார்கள், எழுக தமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்ட பொழுது மேடையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளே நிறுத்தப்பட்டார்கள். கட்சிப் பிரதிநிதிகள் அல்ல. அதேசமயம் பேரணிக்காக உழைத்த கட்சிகளுக்கு பின்னர் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது என்று.

அப்படியல்ல. இது ஐந்தாவது பாதகமான அம்சம். ஆறாவது பாதகமான அம்சம்— மழை. வவுனியாவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் அரைவாசி அளவே வந்து சேர்ந்தது என்று கூறப்படுகிறது. காலை ஏழு முப்பது வரை கடுமையான மழை காரணமாக மக்களை ஏற்றி இறக்குவது கடினமாகிவிட்டது என்று கூறப்படுகிறது. எனினும் பேரணிக்கு மழைவிட்டுத் தந்தது.

இவ்வாறாக பல்வேறு சவால்களின் மத்தியில் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இப்படிப் பார்த்தால் இதற்கு முந்திய எழுக தமிழோடு ஒப்பிடுகையில் இம்முறை சவால்கள் அதிகம். இச்சவால்களையும் மீறி ஐயா—யிரத்துக்கும் குறையாதவர்கள் பேரணிக்கு வந்தார்கள். அவர்களில் அதிகமானவர்கள் வழமையாக வருபவர்கள். பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும், முதியோரும், குழந்தைகளுமாக பேரணியை அவர்களே அதிகம் நிரப்பினார்கள். எனவே பேரணி தோல்வி என்று சொன்னால் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் தோற்று விட்டார்கள் என்று பொருள் அல்ல. பேரணி தோற்க வேண்டும் என்று யாராவது உள்ளூர விரும்பியிருந்தால் அவர்கள் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் தோற்பதை இரசிக்கிறார்கள் என்று பொருள்.

வந்த தொகை காணாது என்பதற்காக எழுக தமிழை கீழ்மைப்படுத்தும் அனைவரும் ஒரே கோட்டில் நிற்கிறார்கள். அதாவது தமது சொந்த மக்களின் போராட்ட நெருப்பை அவமதிக்கிறார்கள். அதில் சிலர் வக்கிரமான முறைகளில் விமர்சிக்கிறார்கள். தமிழ் எப்பொழுது விழுந்தது இப்பொழுது எழுவதற்கு? என்று




ஐந்தாவது பாதகமான அம்சம் — அது ஓர் அலுவலக நாள் என்பது. அதிலும் குறிப்பாக தமிழ் மாதத்தின் கடைசி முகூர்த்த நாள் என்பது. அது ஒரு அலுவலக நாள் என்பதனால் பேரவை கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தது. ஒப்பீட்டளவில் கடையடைப்பு வெற்றி. மன்னாரிலும், வவுனியாவிலும் அது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. மற்றும்படி வடக்கிலும், கிழக்கில் சில இடங்களிலும் நகரங்கள் முடங்கின. இவ்வாறு நகரங்களையும், தெருக்களையும் முடக்கிவிட்டு ஒரு பேரணியை ஒருங்கிணைக்கலாமா என்ற கேள்வி உண்டு. ஒரு முழு நாள் கடையடைப்பைக் கேட்காமல் சில மணித்தியாலங்கள் மட்டும் கடைகளை அடைக்க கேட்டிருந்தால் கடைகளில் வேலை செய்பவர்கள் பெருந்தொகையாக பேரணிக்கு வந்திருப்பார்கள் என்று ஒரு வர்த்தகர் சொன்னார்.

மேலும் கடையடைப்பின் மூலம் பாடசாலைகள் இயங்கவில்லை. அதாவது மாணவர்கள் பாடசாலைக்குப் போகவில்லை அல்லது குறைந்தளவே போனார்கள். ஆனால் ஆசிரியர்களும், அதிபர்களும் போனார்கள் அவர்களில் எத்தனை பேர் பேரணிக்கு வந்தார்கள்? அவர்களை பேரணிக்குள் இணைப்பதற்கு பேரவை என்ன நடவடிக்கை எடுத்தது?

அடுத்தது தனியார் கல்வி நிறுவனங்கள். தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் தொகையும் ஒரு பெரிய தொகை. கடையடைப்பு இல்லை என்றால் அதுவும் பேரணியில் சேரும். இம்முறை சிலர் கேட்கிறார்கள். வேறு சிலர் தமிழின் எழுச்சியை ஆண்குறியின் எழுச்சியோடு ஒப்பிட்டு ஒரு மக்கள் எழுச்சியை கேவலப்ப்படுத்துகிறார்கள். அவ்வாறு தமிழ் எழுவதற்கு என்ன லேகியம் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்கிறார்கள். சிலர் வயாகரா கொடுக்கலாம் என்று முகநூலில் எழுதுகிறார்கள்.

இத்தனை தமிழ் வக்கிரங்களின் மத்தியிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த பார்த்திபன் வரதராஜனின் பதிவை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எழுக தமிழை ஆதரிக்காத ஒரு கட்சியின் மாநகர சபை உறுப்பினர் அவர். ஆனால் மக்கள் எழுச்சிக்கு மதிப்பளித்து அதை கொச்சைப்படுத்தக் கூடாது என்று நிதானமாக முகநூலில் பதிவிட்டிருந்தார். ஓர் இளம் அரசியல்வாதியின் அந்த முதிர்ச்சியும், நிதானமும் முன்மாதிரியானவை. தமிழ் கட்சிகளில் இருப்பவர்கள் அதை பின்பற்றினாலே போதும் தமிழ் தானாக எழுந்து விடும்.

அன்று முற்ற வெளியில் மக்கள் திரளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தேன். அப்பொழுது புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர் ஒருவர் சொன்னார் “என்னைக் கைது செய்து விசாரித்த புலனாய்வு அதிகாரியும் வந்து நிற்கிறார்” என்று. அந்த அதிகாரி மட்டுமல்ல அவரைப்போல பலர் அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாருமே ஒருவித ஓய்வான மனோநிலையோடு எழுக தமிழைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய வேலையை தமிழ்த் தரப்புக்கள் இலகுவாக்கிக் கொடுத்ததை உள்ளூர இரசித்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்களா?

# இராணுவ உறவுகள்

## இராஜதந்திரத்தின் ஒரு முக்கிய பகுதி

### அமெரிக்க தூதுவர்



இருநாட்டு இராணுவத்துக்கு இடையிலான உறவுகள், இராஜதந்திரத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும் என, சிறீலங்காவுக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் பணியாற்றும் 12 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும், சிறீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று கொழும்பில் சந்தித்து, பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்த கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

இதில் சிறீலங்காவுக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ், சிறீலங்காவுக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் மற்றும் 12 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள், சிறீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கீச்சகப் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள, சிறீலங்காவுக்கான அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ், இருநாட்டு இராணுவத்துக்கு இடையிலான உறவுகள், இராஜதந்திரத்தின் முக்கியமான ஒரு பகுதியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**2ம் பக்கத் தொடர்ச்சி...** **எமது உறவுகளின் விலை ஆறாயிரம்....**

வெறும் ஆறாயிரம் ரூபாவை வழங்கி காணமல் போனவர்கள் பற்றி அலுவலகத் தினையும் அமைத்து, விசாரணை என்ற பெயரில் அனைத்தையும் முடக்கி எம்மை ஏமாற்றி மரணிக்கச் செய்வதே அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. இந்த விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சட்ட மூலத்திற்கு ஆதரவாக இலங்கை அரசிற்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக இருப்பதும் வேதனையாக இருக்கின்றது. அரசு அறிவித்த இந்த ஆறாயிரம் ரூபா கொடுப்பனவிற்கு பின்னர் இவர்களின் ஆதரவும் இருப்பதை எம்மால் உணரமுடிகிறது.

எமது பகுதிகளில் இருக்கின்ற காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலங்கள் மூடப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறியும்வரை எமது நீதிகன்கான போராட்டம் தொடரும்.

நாம் அரசின் உள்நாட்டு விசாரணைகள் மீது நம்பிக்கை இழந்துள்ளதோடு அரசாங்கத்தின் இவ்வாறான மிலேச்சத்தனமான செயற்பாடுகளை பார்த்துக்கொண்டு இனியும் பொறுக்க முடியாது. ஆகவே சர்வதேசம் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தினை கையில் எடுத்து பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகின்றோம் என்றனர். இதேவேளை, சில தரப்பினருக்கு இந்த நிவாரண உதவி தேவையில்லை என்றாலும், பலர் இந்த நிவாரண தொகையை எதிர்பார்த்துள்ளதாக காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிக்கின்றார். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பலருக்கு இந்த நிவாரண தொகை உதவியாக இருக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டிய அவர் தமது அலுவலகத்தை ஒருபோதும் வட மாகாணத்திலிருந்து அப்புறப்படுத்த முடியாது எனவும் கூறியுள்ளார்.

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நடைபயணம்



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியின் ஏற்பாட்டில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய நடைபயணம் நேற்றைய தினம் காலை ஆரம்பிக்கப்பட்டது. வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியிலிருந்து ஆரம்பமாகிய நடைபயணம், தியாக தீபத்தின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியுடன் இணைந்து யாழ்பாணத்தில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் திடலை சென்றடைந்தது. ஊர்தியில் அமைக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப்படத்திற்கு காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களால் மலர்மாலை அணிவிக்கபட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, சிங்கள குடியேற்றங்களை நிறுத்து, அரசியல் கைதிகளை விடுதலை செய், இனஅழிப்பு மற்றும் காணாமல் ஆக்கபட்டவர்களைக் கண்டறிய சர்வதேச விசாரணையை மேற்கோள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த நடைபயணம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், மற்றும் சட்டதரணி சுகாஸ், கட்சியின் உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். நடைபயணம் வவுனியா பிரதான வீதியை நெருங்கிய வேளை ஊர்வலத்தை தடுத்த காவல்துறையினர் ஒலிபெருக்கிப் பாவனையை நிறுத்துமாறு உத்தரவிட்ட நிலையில், சற்று நேரம் குழப்பம் ஏற்பட்டிருந்தது. ஒலி பெருக்கி பாவனை இல்லாமல் பயணத்தை மேற்கொள்ளுமாறு காவல்துறையினரால் பணிக்கபட்டது. அதன்பின்னர் புதிய பேருந்து நிலையம் வரைக்கும் ஒலி பெருக்கி பாவனை இல்லாமல் நடைபயணம் தொடர்ந்தது.






2ம் பக்கத் தொடர்ச்சி... **இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு**

'கலப்புப் நீதிமன்றம்' எனும் பதம் தவிர்க்கப்பட்டுள்ளது. அன்றில் இருந்து, கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை இலங்கை அரசானது முழுமையாக நிராகரித்ததோடு மட்டுமல்லாது, இலங்கையின் மிக உச்சநிலை அதிகாரம் மிக்க பொறுப்புகளை வகிக்கும் சனாதிபதி, பிரதமர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஆகியோர், எந்தவொரு படையினரும், எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய கள யதார்த்தத்தைக் கருத்தில் கொண்டு, ஐ.நா மனித உரிமைகள் சபையானது 40ஆவது கூட்டத்தொடரின்போது, குற்றவியல் நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்த மனித உரிமைகள் சபை எனும் அமைப்பையும் தாண்டிச்சென்று சாத்தியமான அனைத்து வழிகளையும் கவனத்தில் எடுக்குமாறு தனது உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டது. இந்தப் பின்னணியில், யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகளாகிய நிலையில் இலங்கையில் குற்றவியல் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழி, இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரை செய்வது மட்டுமே என இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிகளாக இந்த மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை மிகவும்உறுதியாக கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

2ம் பக்கத் தொடர்ச்சி... **வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான**

சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமைக்கு ஆதரவளித்தது. பின்னர் வடக்கில் கிளைகளை திறப்பதற்கு உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டபோதும் கூட்டமைப்பு வரவேற்றது. தற்போது நிவாரணக்கொடுப்பனவு அறிவிப்பு விடுக்கப்பட்டபோது கூட்டமைப்பு மௌனமாகவுள்ளது. இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினையும், இழப்பீட்டு பணியகத்தினையும் இயங்கச் செய்வதன் மூலம் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளை, தேடல்களை முடக்கி விடமுடியும் என்பது தான் திட்டமாகவுள்ளது.

உறவுகளை இழந்து துடிப்பவர்கள் வெறும் ஆறாயிரத்தினை வாங்குவதற்கு இணங்கிக்கொள்வார்களாயின் அவர்களின் போராட்டங்கள் உட்பட அனைத்தினையும் முடக்கிவிடமுடியும் என்றும் அரசாங்கம் கங்கணங் கட்டியுள்ளது.

இந்த பின்னணியில் கூட்டமைப்பும் மௌனமாக இருப்பதானது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு துணைசெல்கின்றமையையே வெளிப்படையாக காட்டுகின்றது. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது உறவினர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர் அரசாங்கம் அறிவித்த இந்த ஆறாயிரம் ரூபாவை பெற்றுக்கொள்ளத் தயாரா? காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் கண்ணீரை வைத்து வாக்குச் சேகரித்து தென்னிலங்கை அரசியல் சக்திகளிடத்தில் சரணாகதியடைந்திருக்கும் கூட்டமைப்பு இப்பொழுது தனக்கு வாக்களித்த மக்களையும் காட்டிக்கொடுக்க விளைந்திருக்கின்றது என்பது வெளிப்படையாகியுள்ளது.

ஆகவே தமிழ்த்தேசியத்தில் பற்றுறுதி கொண்டுள்ள அரசியல் தரப்புக்கள், சிவில் சமுகத்தினர் மற்றும் ஏனைய அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தினை அலட்சியப்படுத்தி அவர்களின் கோரிக்கைகளின் வீச்சினை குறைக்கும் கூட்டமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கபடத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது என்றுள்ளது.

# BREXIT : பாராளுமன்றத் தாய்க்கொரு பழியென்றால்!



வேல்தர்மா

ஐக்கிய இராச்சியத்தில் சிறந்த மக்களாட்சி நிலவுவதற்கு பாராளுமன்றத்தின் மக்களவையும், பிரபுக்கள் அவையும் அடிப்படையாக உள்ளன. பிரிவெளியேற்றம் (BREXIT) தனக்கு ஏற்றபடி நடப்பதற்கு பிரித்தானிய தலைமை அமைச்சர் பொறிஸ் ஜோன்சன் பாராளுமன்ற நடைமுறைகளை குழி தோண்டிப் புதைக்க முயல்கின்றார். அவரது முக்கிய நோக்கம் ஐ.இ 2019 ஐப்பசி 31—ம் திகதிக்கு முன்னர் வெளியேற வேண்டும். வெளியேற்றம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஐ.இ ஓர் உடன்பாடில்லாமல் வெளியேறுவதற்கும் அவர் தயாராக உள்ளார்.

### பாராளுமன்றத்தை மூடி பொது விவாதம் முடக்கும் சதி

உடன்பாடில்லா வெளியேற்றத்திற்கு பொறிஸ் ஜோன்சனின் பழைமைவாதக் கட்சியின் பல உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அவர் விரும்பிய படியான உடன்பாடில்லா வெளியேற்றத்தை தடுப்பதற்காக பாராளுமன்றத்தை மூட ஜோன்சன் முயன்றார். மக்களாட்சி சிறப்பாகச் செயற்பட மாற்றங்கள் விவாதிக்கப்பட வேண்டும். பொது விவாதத்திற்கான உச்ச மேடையான பாராளுமன்றம் மூடப்படுவது மக்களாட்சியின் கழுத்தை நெரிப்பதாகும். மற்ற நாடுகளில் அரசின் செயற்பாடுகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக தோன்றினால் அதற்கு எதிராக நீதி மன்றத்தில் முறையிடப்படும். ஆனால் ஐக்கிய இராச்சியத்தில் அப்படி நடப்பது மிகவும் குறைவு. இருந்தும் பொறிஸ் ஜோன்சனின் பாராளுமன்றத்தை மூடும் நடவடிக்கைக்கு எதிராக ஐக்கிய இராச்சியத்தின் ஒரு பகுதியான ஸ்கொட்லாந்தின் உச்ச நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. பாராளுமன்றத்தை மூடியதால் தலைமை அமைச்சர் தனது அதிகார வரம்பை மீறியுள்ளார் என 75 பாராளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு செய்தனர். பாராளுமன்றத்தை மூடுவது அவ்வப்போது நடப்பது என அரச தரப்பில் வாதிடப்பட்டது. மூடப்பட்டமைக்கு அரசு கொடுத்த விளக்கம் போதுமானதாகவும், நம்பகரமானதாகவும் இல்லை என ஸ்கொட்லாந்தின் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் மூவரும் ஒரு மனதாக கருதினர். அரசின் நடவடிக்கை வழமைக்கு மாறாக ஆளும் கட்சியின் திட்டத்திற்கு முட்டுக் கட்டை போடுவதைத் தடுப்பதாக உள்ளது என அவர்கள் மூவரும் கருதி பாராளுமன்ற மூடப்படுவது சட்ட விரோதமானது எனத் தீர்ப்பு வழங்கினர்.

### பழமைவாதிகளின் புதிய வாதம்

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளில் நீதிமன்றமும், நீதிமன்றத்தின் செயற்பாடுகளில் பாராளுமன்றமும் தலையிடுவதில்லை என்ற நடைமுறை பிரித்தானியாவில் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ஸ்கொட்லாந்தில் பிரிவெளியேற்றத்திற்கு எதிரான கருத்து மிக மிக வலுவாக இருக்கின்றது. அதனால் ஸ்கொட்லாந்து நீதிபதிகள் பக்கச் சார்பாக நடக்கின்றனர் என ஆளும் கட்சியில் அமைச்சர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர். அது நீதிமன்ற நடவடிக்கையில் அரசு தலையிடும் செயல் என்ற குற்றம் சாட்டப்படுகின்றது. பிரித்தானியாவின் பழம்பெருமையைப் பேணும் கட்சியாக பொறிஸ் ஜோன்சனின் பழமைவாதக் கட்சி இருந்தது. இப்போது அதே பழம் பெருமையைச் சிதைக்க முயல்கின்றது. ஸ்கொட்லாந்து நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டும்படி பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். ஆனால் ஆளும் கட்சியினர் பாராளுமன்றம் மூடியே இருக்கும் எனச் சொல்லி இலண்டனில் உள்ள ஐக்கிய இராச்சியத்தின் உச்ச நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்தனர். அந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு 2019 புரட்டாதி 23—ம் திகதிக்குப் பின்னர் வெளிவரும்.

### உண்மைகள் மறைக்கப்பட்டன

மக்களாட்சியின் முக்கியமான அம்சங்களில் ஒன்று அரசின் வெளிப்படைத்தன்மை. உடன்பாடு ஏதுமின்றி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஐக்கிய இராச்சியம் வெளியேறுவதால் ஏற்படும் பாதகங்களின் மோசமான நிலை பற்றிய அரசுக்கு கிடைத்த தகவல்களை அரசு திட்டமிட்டு மறைத்தமை அம்பலமாகியுள்ளது. உடன்பாடிலா வெளியேற்றத்தால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து பிரான்ஸூடாக ஐக்கிய இராச்சியத்திறு வரும் பார ஊர்திகளின் எண்ணிக்கை நாற்பது முதல் ஐம்பது விழுக்காட்டால் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால் அத்தியாவசிய மருந்துகள் கிடைப்பதில் தாமதம், சில உணவுகளுக்கு தட்டுப்பாடு, சட்ட விரோத மீன் பிடித்தல், ஒழுங்கு குலைந்து குழப்பம் உருவாதல், எல்லைகளின் தாமதம், குறைந்த வருவாய் உள்ள மக்களின் உணவு விலை அதிகரிப்பு போன்றவை உருவாகும் என்ற உணமை மறைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைப் பணிமனைக்கு பல்வேறு அரச அமைப்புக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாக வைத்து உருவாக்கிய பத்திரங்களை அரசு மக்களுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்தது அம்பலமாகியதால் சினம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நிர்ப்பந்தித்ததால் கடைசி நேரத்தில் அரசு பணிந்து மறைத்த தகவல்களை வெளிவிட்டது.

### பிழையான முன்னுதாரணம்

அரசியல் யாப்பில் ஐக்கிய இராச்சியத்திற்கு பாராளுமன்றத்தினதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைச்சர்களினதும், அவைத்தலைவரின் செயற்பாடுகளும், முடிவுகளும் முன்னுதாரணமாக அமைந்து அதுவே எழுதாத யாப்பின் வாசகங்களாக உருவெடுக்கும். தலைமை அமைச்சர் பொறிஸ் ஜோன்சனின் நகர்வுகள் ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றம் மக்களுக்குத் துரோகம் இழைப்பதாக நிபுணர்கள் குற்றம் சாட்டும் வகையில் அமைகின்றது.

### குறுக்கு வழியில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் முயற்சி

பிரித்தானியச் சட்டத்தின் படி தேர்தலின் பின்னர் நான்கரை ஆண்டுகள் ஆட்சி தொடர வேண்டும். இடைநடுவில் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதாயின் பாராளுமன்றத்தில் அதற்கான சட்டம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். தற்போதைய கருத்துக் கணிப்பின் படி ஆளும் பழமைவாதக் கட்சிக்கு தொழிற்கட்சியிலும் பார்க்க அதிகத் தேர்தல் வெற்றி வாய்ப்பு இருப்பதால் தலைமை அமைச்சர் பொறிஸ் ஜோன்சன் பாராளுமன்றத்தைக் கலைத்து தனக்கு ஆதரவானவர்களை தேர்தலில் நிறுத்தி தனக்கு விரும்பியபடி பிரிவெளியேற்றம் செய்ய முயல்கின்றார். தற்போது அவரது கட்சி அறுதிப் பெரும்பான்மையே இல்லாத நிலையில் இருப்பதாலும், தொழிற்கட்சி பிரிவெளியேற்றத்தைத் தாமதப்படுத்தி பிரிவெளியேற்றம் தொடர்பாக இரண்டாம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு மேற்கொள்ளும் திட்டத்தில் இருப்பதாலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது. இதனால் தலைமை அமைச்சர் தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்தே தனது ஆட்சிக்கு எதிரான ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றும் திட்டத்துடனும் இருக்கின்றார். தொழிற்கட்சி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதற்கு கோழிக்குஞ்சு போல் அஞ்சுகின்றது என்றார் பொறில் ஜோன்சன். தொழிற்கட்சித் தலைவர் ஜெரமி கோபின் ஜோன்சனின் தேர்தல், மாயக் கிழவி ஸ்நோவைற்றைக் கொல்லக் கொடுத்த நஞ்சு அப்பிள் போன்றது அதை ஏற்க முடியாது என்றார்.

### தலைமை அமைச்சரின் சட்ட மறுப்பு


பிரித்தானியப் பாராளுமன்றம் உடன் பாடில்லா பிரிவெளியேற்றம் செய்யக் கூடாது எனச் சட்டம் இயற்றினால் அதை மீறிச் செயற்படும் திட்டமும் பொறிஸ் ஜோன்சனிடம் இருக்கின்றது. அதனால் ஜோன்சன் சிறையில் அடைக்கப்படலாம். அந்த தியாகத்தைச் செய்ய அவர் தயாராக இருக்கலாம். ஆனால் அது அவரின் பழைமைவாதக் கட்சியின் தற்கொலைக்கு ஒப்பானது. ஆனால் ஐக்கிய இராச்சியத்தின் சட்டத்திற்கு எதிரான ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிக்குமா என்பது பெரும் கேள்வி.

பிரிவெளியேற்றத்தை தாமதப்படுத்தும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டால் அதன்படி தாமதப்படுத்தும் வேண்டுகோளை முதலில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பி விட்டு பின்னர் இன்னும் ஒரு வேண்டுகோளில் அப்படிச் செய்ய வேண்டாம் என அரசு முடிவெடுத்ததாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தெரிவிக்கலாம். ஐக்கிய இராச்சியத்தின் பராளுமன்றத்தின் பெருமையைப் பலி கொடுத்தாவது ஐக்கிய இராச்சியத்தை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என பொறிஸ் ஜோன்சனும் அவர் ஆதரவாளர்களும் துடிக்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றது.

# 2600 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவு பெற்றிருந்த தமிழ்ச் சமூகம்

## தமிழகத்தின் கீழடி ஆய்வை உற்றுநோக்கும் உலகம்

தமிழகத்தின் கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்கள் மீது செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளை தமிழகத் தொல்லியல் துறை வெளியிட்டது. தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், தொல்லியல்துறை செயலாளர் உதய சந்திரன் ஆகியோர் இணைந்து இதனை வெளியிட்டனர். இந்த முடிவுகள் இதுவரை நிலவிவந்த பல்வேறு வரலாற்று பூர்வமான கருத்துக்களை தகர்க்கும் அளவிற்கும், புதிய பாதையை உருவாக்கும் அளவுக்குமாக உள்ளன. கீழடி அகழாய்வு என்பது எந்த அளவுக்கு உலகிற்கே முக்கியத்துவமானது என்பதை, உணர்த்தும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக, தொல்லியல் துறை வெளியிட்ட தகவல்கள் இருந்தன என்றால் அது மிகையல்ல.



### வைகை நதி அருகே

தமிழகத்தின் மதுரை நகரத்திற்கு தென் கிழக்கில் சரியாக சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது கீழடி. இன்று அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளையும் உற்றுநோக்க வைத்துள்ளது இந்த சின்ன கிராமம். இதற்கு காரணம் இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளில் கிடைக்கும் புதுப்புது தகவல்கள். இங்கு கிடைத்த ஆறு வகையான பொருட்கள் ஆக்ஸிலரேட்டட் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி ஆய்வுக்காக அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பீட்டா அனலிடிக்ஸ் ஆய்வகத்திற்கு அனுப்பப் பட்டு, மிகச் சிறப்பாக ஆய்வு செய்து முடிக்கப்பட்ட தகவல்கள் என்பதால் இதன் நம்பகத் தன்மையை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.



### சங்க காலம்


இதில் மிகமிக முக்கியமான ஒரு தகவல் சங்ககாலம் தொடர்பாக இதுவரை நிலவிவந்த கருத்தியல் மாறி இருப்பதுதான். தமிழகத்தின் இலக்கியச் செழுமை மிகுந்த பொற்காலமாக கருதப்படுவது சங்ககாலம். ஆண்கள் மட்டுமின்றி பல பெண் புலவர்களும் அந்த காலகட்டத்தில் வாழ்ந்து வந்தனர். ஏசு நாதர் பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகள் முன்பாக சங்ககாலம் துவங்கியதாக இதுவரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் நமது நாகரிகம் அதை விட பழமையானது என்பதை கீழடி ஆய்வுகள் தற்போது உறுதி செய்து உள்ளன. ஆம்.. கிடைத்து இருக்கக்கூடிய ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது, சங்க காலம், இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகள் முன்பே துவங்கி விட்டது உறுதியாக தெரிகிறது. இது இதுவரை எந்த ஆய்விலும் நிரூபிக்கப்படாத தகவல் என்பதால் அதி முக்கியத்துவம் பெறுகிறது.

### எழுத்து

இதன்மூலம் 2600 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ்ச் சமூகம் எழுத்தறிவு பெற்றிருந்தது. அறிவியல் சமூகமாக விளங்கினார்கள் என்பது உறுதியாகி உள்ளது. கல்தோன்றி மண்தோன்றா காலத்தே, வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி, தமிழ்குடி என்பது வெறும் வார்த்தை கிடையாது. அது உணர்வாலும், உயிராலும் பொருந்திய உண்மை என்பது அறிவியல் பூர்வமாகவே தற்போது நிரூபணம் ஆகிவிட்டது.

### நகர நாகரிகம்

சிந்து சமவெளி நாகரிகம் என்பது தான் மிகப் பழமையான நாகரிகம். எனவே அது முதலாம் நகர நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது. இதையடுத்து கங்கை சமவெளியில் இரண்டாம் நகர நாகரிகம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாம் நகர நாகரிகத்தின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு. அதற்கு இணையாக தமிழகத்தில் இதுவரை எந்த நகர நாகரிகமும் கண்டுபிடிக்கப்பட்டதில்லை. முதல் முதலாக கீழடியில், இரண்டாம் நகர நாகரிக கால கட்டத்தில் தமிழகத்தில் இருந்த ஒரு நகர நாகரிகம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அங்கே கங்கையில், இரண்டாம் நகர நாகரிகத்தின் காலத்தில், இங்கே வைகை கரையில், தமிழர் நாகரிகம் இருந்துள்ளது.



### சிந்து சமவெளி நாகரிகம்

கீழடி ஆய்வில் கிடைத்துள்ள மற்றொரு முக்கியமான தகவல் என்பது, சிந்து சமவெளி நாகரிகத்திற்கும், கீழடி நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதுதான். சிந்து சமவெளியில் கிடைத்த வரிவடிவங்கள், கீழடியில் கிடைத்துள்ள வரி வடிவங்களுடன், பலவகைகளில் ஒத்துப்போகின்றன என்பது இந்த ஆய்வின் மற்றொரு அம்சம். கீழடியில் இதுவரை சுமார் ஆயிரம் வகையான வரிவடிவங்கள் கிடைத்துள்ளன. கணிசமான வரி வடிவங்கள் சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட வரி வடிவங்களுடன் ஒத்துப் போகின்றன. தமிழ் பிராமி எழுத்துக்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

### உரோம்

கீழடி ஆய்வில் கிடைத்துள்ள மற்றொரு முக்கிய தகவல் என்பது, அந்த கால கட்டத்திலேயே, தமிழர்கள் வடக்கு மற்றும் வடமேற்கு இந்திய பகுதிகளில் வாழ்ந்த மக்களுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதுதான். இதைவிட ஒரு சுவாரசியமான தகவல் உரோம் போன்ற பகுதிகளுடன் கூட கீழடி மக்கள் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர் என்பது தான். இதற்கு ஆதாரமும் இந்த ஆய்வில் கிடைத்துள்ளது.

அப்படி என்ன ஆதாரம் என்கிறீர்களா? வடமேற்கு இந்தியாவுக்கு உட்பட்ட தற்போதைய மகாராஸ்ரா, குஜராத் போன்ற பகுதிகளில் பரவலாக காணப்படும் அகேட் மற்றும் கார்னிலியம் கற்களாலான மணிகள் இங்கு கிடைத்துள்ளன. உரோம் நாட்டை சேர்ந்த அரிடைன் பானையோடு, கீழடியில் கிடைத்துள்ளது. இந்த வகையான பானைகள் உரோம் நாட்டில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பழக்கத்திலிருந்தவை. அப்படியானால் கீழடியில் வாழ்ந்த தமிழ் மக்கள், விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய தொழில்களோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் கடல் தாண்டியும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது உறுதியாகிறது. இந்த மூன்று முக்கிய தகவல்களும் தமிழக வரலாற்றில் மட்டுமின்றி, உலக வரலாற்றிலும் மிக முக்கிய பதிவுகளாக பார்க்கப்படுகிறது.